மின்னிதழ்

# தேசியம்

THESIYAM තේසියම්

www.thesiyamnews.com



WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



குரல் - 68 | 28.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# யாழில் சட்டத்தை மிதித்து அடாவடியாக நடக்கும் பொலிஸார்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா



தையிட்டி விவகாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் இளம் சட்டத்தரணி சுகாஷ் ஆகியோர் உட்பட போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை இனி வரும் காலத்திற்கான ஒரு முன்னறிவிப்பு என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார். அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது, சமீப நாட்களாக பொலீஸ் தரப்பினால் யாழ்ப்பாணத்தில் காட்டப்படும் மூர்க்கத்தனமான அணுகுமுறை அடாவடித்தனத்தின் அப்பட்டமான வெளிப்பாடு ஆகும்.

பக்கம் 5

# தமிழர் பகுதியில் அடாவடியில் இறங்கியுள்ள பௌத்த பிக்கு

## நடவடிக்கை எடுக்காத பொலிசார்



பக்கம் 5

தெனியாய – மொறவக்க பகுதியில் வாழும் மலையக தமிழர்கள், தமது வாழ்வாதாரத்திற்காக வளர்த்த வாழைமரங்களை, சில குண்டர்கள் வெட்டி வீசும் சம்பவம் தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மொறவக்க பெருந்தோட்ட பகுதியானது, தற்போது பௌத்த பிக்கு ஒருவரின் கட்டுப்பாட்டில் செயற்பட்டு வருவதாக அந்த பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், பல நூற்றாண்டு காலமாக இந்த பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தாம்,

# தமிழர் பகுதியில் அழிக்கப்பட்டுள்ள 125 ஏக்கர் காணி கண்டுகொள்ளாத அரச அதிகாரிகள்!



பக்கம் 5

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பம்பைமடு, சுந்தரபுரம் பகுதியில் வனவள திணைக்களத்துக்குச் சொந்தமான 125 ஏக்கர் வன ஒதுக்குக் காடு தனிநபர்களால் பூரணமாக அழிக்கப்பட்டுள்ளது. குறித்த காட்டுப்பகுதி முற்றாக அழிக்கப்பட்டு துப்பரவு பணிகளும் நிறைவடைந்துள்ளதுடன், வனவள அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என காட்டுப்பகுதியினை அண்டியுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காணி அற்ற நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் குறித்த கிராமத்தில் வசித்து வருகின்றார்கள்வாழ்வாதாரத்துக்காக பற்றைக் காடுகளைத் துப்புரவு செய்து உழுந்து விதைத்தாலே உடனடியாக வனவள அதிகாரிகள் கைது செய்து எம்மை

# வட கிழக்கு மக்களது போராட்டம்

## உணர்வு பூர்வமானது : சக்திவேல் தெரிவிப்பு !



பக்கம் 5

வட கிழக்கு மக்களது போராட்டம் உணர்வுபூர்வமானது என அருட்பணி பா.சக்திவேல் தெரிவித்துள்ளார். மலையக மக்களின் 200 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கிராமிய உழைப்பாளர் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வில் மலையக மக்களின் மாண்பினைப் பாதுகாக்கும் அமைப்பு சார்பாக அருட்பணி பா.சக்திவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

# கொழும்பில் நல்லிணக்க தூபி

## அமைப்பதற்கு ஜனாதிபதி தயார்: டக்ளஸ்



பக்கம் 5

போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்காக கொழும்பில் நல்லிணக்க தூபி ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி தயாரான நிலைப்பாட்டில் இருப்பதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 1983 -2008 உள்நாட்டு இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் இன மத மொழி பேதங்களுக்கு அப்பால்


தமிழர் தாயகம் எங்கும்!
வெளிவந்துவிட்டது!
தேசியம் பத்திரிக்கை!

கல்வி,சமூக,அரசியல் வாரந்த இதழ்
அனைத்து பத்திரிகை
கடைகளிலும் கிடைக்கும்.

தேசியம் THESIYAM www.thesiyamnews.com



# நகர சுத்திகரிப்பாளர்களும்! நரகமும்!!

துசியந்தி பரமேஸ்வரன் – யாழ் பல்கலைக்கழகம்

“தீண்டாமை பாவம்: கடவுளுக்கும் மனித குலத்திற்கும் எதிரானது” எனக் கூறினாலும், கடவுளை வைத்து உருவாக்கிய நால்வருணக் கொடுமையால் உருவானது தீண்டாமை எனும் போது கடவுளும் இதற்கு உடந்தை தானே?

பாவம் செய்தது கடவுளும் தானே. இதனால் தான் தீண்டாமை எனும் சொல் இன்றும் நம்மத்தியில் ஊடாடிக்கொண்டிருக்கிறது. தீண்டாமை என்பது ஆரம்பகாலத்தில் சாதிய ரீதியில் அதாவது ஒருவரின் பிறப்பின் அடிப்படையில் பார்க்கப்பட்ட



போதும் இன்று அந்நிலை மாறி சாதிய அமைப்பு முறை இன்று வழக்கொழிந்து போயுள்ள போதும் தீண்டாமை என்பது வெவ்வேறு வழிமுறைகளில் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது.

கல்வி, மருத்துவம், தொழில், மேம்பாடு உள்ளிட்ட பெரும்பாலான விடயங்களில் சமூக முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும் இன்றும் நம்மத்தியில் தொழில் ரீதியிலான அடக்குமுறைகளும் தொழிற் சுரண்டல்களும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இன்று எல்லோரும் போடடி போட்டுக் கொண்டு அரசாங்க வேலையை செய்தாலும் அதிலும் குறித்த தொழில்கள் தான் உயர்வானது மற்றையவை மட்டமானவை போன்ற ஒரு மறைமுகமான சிந்தனையை இந்த சமூகம் ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில் இன்றும் நம்மத்தியில் நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நிலை என்பது அடிமைப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இவர்களுடைய வாழ்வியலை எடுத்து நோகக் வோமானால் இவர்கள் தங்களுடைய தினக்கூலி வாழ்வாதாரத்திற்கே அனுதினமும் போராட வேண்டிய நிலையே காணப்படுகிறது.

ஏனைய சமூகத்தவர் மத்தியில் இவர்கள் இழிவாகப் பார்க்கப்படுவதோடு அவர்களுடைய எடுபிடி வேலைகளை மேற்கொள்ளும் ஒரு கூலியாடக்ளாகவே இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் அன்றாடம் எத்தனையோ வீடுகளில் குப்பைகளை அகற்றி அவர்கள் வாழ்வதற்கான அழகான சுத்தமான சூழலை உருவாக்கிக் கொடுக்கிறார்கள்.

ஆனால் இவர்களுடைய அன்றாட வாழ்க்கை முறைமையோ கேள்விக் குறியாகக் காணப்படுகிறது. நாம் வாழும் சூழலை சுத்தமானதாக மாற்றும் இவர்கள் சுத்தமற்ற அடிப்படை வசதிகளற்ற ஒரு குடியிருப்புகளிலேயே அன்றாடம் தமது வாழ்க்கையை கொணடு நடாத்துகின்றார்கள். ஆம் இவர்களுடைய வீடுகளோ அல்லது இவர்கள் குடியிருக்கும் காணிகளோ கூட நிரந்தரமற்றவையாகவே காணப்படுகின்றன. இவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கானதோ அல்லது நிலத்திற்கான உறுதியோ கூட இவர்களிடம் இல்லை என்பதே உண்மை.

இவர்களுடைய குடியிருப்புக்களைப் பார்ப்போமேயானால் ஒரு வீட்டிற்குள் ஆறு ஏழு குடும்பங்கள் வசிப்பவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் குடியிருக்கும் வீடுகள் கூட பரந்து விரிந்ததாக காணப்படாது. மிகவும் சிறிய வீட்டிற்குள் இந்தக் குடும்பத்தவர்கள் தங்களுடைய பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். அத்தோடு அடிப்படை சுகாதார வசதியான மலசலகூட வசதி கூட இவர்களுக்கு இல்லை. ஒரு மலசல கூடத்தையே பொதுக் கழிப்பறை போன்று இக் குடும்பத்திலுள்ள அனைவரும் பயன்படுத்த வேண்டிய தேவையும் இவர்களுக்குக் காணப்படுகிறது. இதனால் பெரும் அசௌகரியங்களையும், சுகாதாரப் பிரச்சினைகளையும் இவர்கள் எதிர் கொண்டு வருகிறார்கள்.



அத்தோடு வீட்டு வாயில்களுக் முன்பாகவே கால்வாய்கள் காணப்படுவதாலும் அகக் நல்வாயினூடாகவே அனைத்துக் கழிவுகளும் வெளியேற்றப்படுவதாலும் இவர்கள் வசிக்கும் சூழல் எப்போதும் துர்நாற்றம் வீசுவதாகவே காணப்படுகிறது. இதனால் பல நோய்களும் இவர்களைத் தாக்குகிறது. அத்தோடு இவர்கள் முன்வைக்கும் முக்கிய பிரச்சினையாக இருப்பது தங்களுடைய பிள்ளைகளின் கல்வி. தாங்கள் கல்வி கற்கவில்லை என்பதற்காகவும் தாங்கள் செய்யும் தொழிலை முன்னிறுத்தியும் பல இடங்களில் தங்களுடைய பிள்ளைகளுக்கான கல்வி மறுக்கப்படுகிறது.

பெரும்பாலும் நகர்ப்புறங்களில் இருக்கும் பெரிய பாடசாலைகளில் தங்களுடைய பிள்ளைகளுக்கான அனுமதி மறுக்கப்படுவதால் அவர்கள் தங்களுடைய கிராமத்திலிருக்கும் சிறிய பாடசாலைகளிலேயே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இங்கும் ஆசிரியர்கள் இவர்களுடைய பிள்ளைகளுக்கு கற்பிப்பது கிடையாது. இவர்களுடைய நண்பர்களும் பெற்றோரின் தொழிலை கூறி இழிவாக நடத்தும் பல செயற்பாடுகளே பாடசாலைகளில் இடம்பெறுகின்றன. இதனால் பல மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியும் உள்ளார்கள்.

பாடசாலைக் கல்வி ஒழுங்கான முறையில் கிடைக்காத இவர்கள் பல தீயபழக்கவழக்கங்களை பின்பற்றத் தொடங்குகிறார்கள். குறிப்பாக போதைப் பொருள் பாவனையை இவர்கள் பழக்கப்படுத்திக் கொள்கிறார்கள்.



பெரும்பாலும் வெளியிடத்திலிருந்து வரும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் இங்கிருக்கும் சிறுவர்களை போதைப் பொருளை கொணடு சேர்க்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். அதற்கான கூலியாக அவர்கள் இச்சிறார்களுக்கு போதைப் பொருளைக் கொடுக்கிறார்கள். எனவே இதற்கு அடிமையாகும் சிறுவர்கள் பயமின்றிக் காலப்போக்கில் போதைப் பொருளை கடத்தத் தொடங்குகிறார்கள்.

பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியதும் பெண் பிள்ளைகள் பலர் இளவயதிலேயே திருமணம் செய்து கொளக்கின்றனர். வாழ்கன் க என்றால் என்ன என்பதை அறியாமலேயே வாழத் தொடங்குகிறார்கள். இவ்வாறு இவர்களாகத் தேர்ந்தெடுக்கும் வாழ்க்கை பல சமயங்களில் பொருத்தமற்றதாகவே போய்விடுகிறது. பல பெண் பிள்ளைகள் குழந்தைகளோடு சீரழிகின்ற நிலை உருவாகியுள்ளது. இவர்களால் தங்களுடைய எதிர்கால வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாத நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் பல பிரச்சினைகளை எதிரொலிக்கின்ற போதிலும் மக்களுக்கான சேவையை பிழையில்லாமலேயே செய்கின்றனர்.

அதிகாலையில் எழுந்து தங்களுடைய கடமைகளை முடித்துக் கொண்டு வேலைக்குச் சென்றால் அங்கிருக்கும் மேலதிகாரிகள் எங்களை நடத்தும் விதம் மிகவும் வேதனைக்குரியதாக இருக்கும்.

இவையனைத்தையும் சகித்துக் கொண்டு மக்களுக்கான சேவையை செய்கையில் அவர்கள் காட்டும் நடத்தைகள் ரணத்தைத் தரும். தங்கள் வீட்டுக் குப்பைகளை கூட அவர்களால் கையால் தொட முடியாது. ஆனால் அதே குப்பையை நாங்கள் கையால் தொடடு தூக்கி அதனைத் தரம் பிரித்துப் போட வேண்டும். இவ்வாறிருக்கையில் வேலைக் களைப்பில் தாகமெடுத்து தண்ணீர் கேட்டால் கூட அதனைத் தருவதற்கே பெரும்பாடுபடுவார்கள். நமக்குத் தருவதற்கென சில பாத்திரங்களை வைத்திருப்பார்கள். அந்தப் பாத்திரத்தில் தான் தண்ணீர் தருவார்கள்.



துப்பரவுத் தொழிலைச் செய்யும் நாங்கள் நிற்கும் கோலம் அலங்கோலமானதாகத் தான் இருக்கும். அதற்காக நாங்கள் சுத்தமற்றவர்கள் என்றில்லை. நாங்கள் போய் வேலை செய்யும் பல வீடுகள் சுத்தமின்றியே காணப்படும். ஆனால் அவர்கள் அதையெல்லாம் பார்க்க மாட்டார்கள். நாங்கள் செய்யும் தொழிலைக் கொணடு எங்களை மதிப்பிடுவார்கள்.

இவர்களுடைய வீட்டுக் கழிவுகளை எல்லாம் அகற்றி சுத்தம் செய்து வீட்டிற்குச் சென்றால் உண்ணும் உணவில் கூட நாட்டம் இருக்காது.

உழைபப் து உண்பதற்காக ஆனால் இவர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் அந்த உழைப்பிற்கான பயனைக் கூட இவர்கள் அனுபவிக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு நிரந்தரக் குடியிருப்பு, குடிநீர், மலசல கூட வசதி, பாதை வசதி மற்றும் கல்வி வசதி போன்றவை இல்லாமல் பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே இச் சுத்திகரிப்புத் தொழிலாளிகளின் வாழ்வாதாரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவர்களின் வாழ்வாதாரம் குறித்து இதுவரையில் எந்தவொரு முன்னேற்ற முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்பதே உண்மை. இவர்கள் மீதான ஒடுக்குமுறையென்பது இன்றும் மறைமுகமாகத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. எமது சமூகத்தில் பல்வேறுபட்ட தொழில்கள் காணப்படுகின்றன. ஆனால் உயர் பதவிகளையே நாம் நாடித் தேடுகின்றோம். இவ்வாறான சுத்திகரிப்புத் தொழிலைச் செய்து நமது சூழலை அழகாக்கும் தூதர்களை நாம் ஏளனமாகப் பார்க்கின்றோம்.

ஆனால் அத்தொழிலை நம்மால் செய்ய முடியாது. சுத்திகரிப்புத் தொழிலாளிகளும் சாதாரண மனிதர்கள் தாம் அவர்களை கழிவிரக்கத்திற்குரியவர்களாகப் பார்க்காமல் எங்களுடைய மனித நேயத்தை கொஞ்சம் அவர்களிடமும் காட்டுவோம்.



# கிளிநொச்சியில் வெடிகுண்டு மிரட்டல் அந்த 2 பெண்களும் யார்?

# ரிஐடியிடம் ஒப்படைக்கப்பட்டது விசாரணை!

கிளிநொச்சியில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் கடிதம் மீட்கப்பட்ட விவகாரத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

28 வயதான இளம் குடும்பப் பெண்ணொரு வரிடம் பொலிசார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். கிளிநொச்சி நகருக்கு அண்மையான பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது. வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் தனது வீட்டுக்கு இரண்டு பெண்கள் வந்ததாக, அந்த வீட்டில் குடியிருந்த பெண் பொலிசாரிடம் குறிப்பிட்டுள்ளார். இடமொன்றை குறிப்பிட்டு, அங்கு வந்ததாகவும், இரவு வெகுநேரமாகி விட்டதால் தமது வீட்டுக்கு செல்ல பேருந்து வசதியில்லையென குறிப்பிட்டு, அந்த வீட்டில் இரவு தங்கி விட்டு செல்லலாமா என கேட்டதாகவும், தான் அனுமதியளித்ததாகவும் அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார். இரண்டு பெண்களையும் வீட்டின் முன்பகுதியில் தங்க வைத்துவிட்டு, அறைக்குள் பிள்ளையுடன் உறங்கச் சென்றுவிட்டதாகவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

நள்ளிரவு 12 மணியளவில் வெளியில் வந்து பார்த்த போது, இரண்டு பெண்களையும் காணவில்லையென்றும், அவர்கள் படுத்திருந்த இடத்தில் காகிதமொன்றும், ரூ.5,000 நாணயத்தாள் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. மதம்தான் எங்கள் மூச்சு உள்ளிட்ட சில வாசகங்களும் கடித்தில் காணப்பட்டன. அதில் இரண்டு தொலைபேசி இலக்கங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

அந்த வீட்டில் தங்கியிருந்த பெண் இஸ்லாமிய மதத்தவர். இரண்டு வருடங்களின் முன்னர், கிளிநொச்சியை சேர்ந்த ஒருவரை இரண்டாவது திருமணம் செய்து, அந்த வீட்டுக்கு குடிவந்தவர். எனினும், கணவர் தற்போது பிரிந்து சென்றுவிட்டார். ஒன்றரை வயது குழந்தையுடன் தனித்து வாழ்ந்து வருகிறார்.

இந்த சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள்.

# எவரெஸ்ட் சிகரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்த தமிழர்...!



முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலையின் நினைவேந்தலை, எவரெஸ்ட் சிகரத்தில் கடந்த மே மாதம் 18ஆம் திகதி நபரொருவர் அனுஷ்டித்துள்ளார்.

இலங்கையில் பிறந்து இங்கிலாந்தில் புலம்பெயர்ந்து வாழும் விவேகானந்தன் துஷியந்தன் என்ற 46 வயதான நபர் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை இவ்வாறு எவரெஸ்ட் சிகரத்தில் அனுஷ்டித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, நான் கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து மலையில் ஏறும் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றேன்.

முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலையின் நினைவேந்தலை எவரெஸ்ட் மலை சிகரத்தில் அனுஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதுக்குள் இருந்தாலும், அதனை சாத்தியப்படுத்த கடந்த காலங்களில் நான் கடுமையாக பாடுபட்டேன்.

இதற்காக நான் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி எவரெஸ்ட் மலையின் சிகரத்தை நோக்கி ஏற ஆரம்பித்தேன்.

என்னுடன் 5 பேர் கொண்ட குழுவினர் எவரெஸ்ட் சிகரத்தை நோக்கி ஏற ஆரம்பித்தனர்.

கடந்த மே மாதம் 18ஆம் திகதி, முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் தினமான அன்று நாம் 8849 மீற்றர் உயரமான எவரெஸ்டின் சிகரத்தை அடைந்து அங்கு நான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்தேன்.

ஆரம்பகால மலையேறும் பயிற்சியை ஜோன்குப்த வழங்கிய போதிலும், எவரெஸ்ட் மலையில் ஏறும்போது இவரது பயிற்சியாளராக யான்தப்பா வழங்கினார்.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது இலங்கை தமிழனும், இலங்கையைச் சேர்ந்த ஆணும் தானே எனக் கூறும் துஷியந்தன், இதற்கு முன்னர் மலேசிய தமிழர் ஒருவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளதாக கூறுகிறார்.

தனது இனத்தின் மீதான பற்றும், நாட்டின் மீதான பற்றுமே என்னை சிகரம் தொடும் அளவு சாதிக்க வைத்தது. எவ்வளவு கஷ்டப்பட்டாலும் நாம் சாதிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரையடுத்து விவேகானந்தன் துஷியந்தன், 13 வயதில் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து சென்றுள்ளார்.

தற்போது திருமணம் முடித்து இங்கிலாந்தில் வாழ்ந்து வருகின்றார். அவருக்கு 3 பெண்பிள்ளைகள் உள்ளனர்.

அத்துடன் இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். மரதன், சைக்கிளோட்டம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடும் இவர் மலையேறுவதை ஆரம்ப காலங்களில் பொழுது போக்காக கொண்டிருந்தார்.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு மலேசியாவின் கொற்றுகினபாலோ, 2016இல் ஆபிரிக்காவின் கிளிமஞ்சாரோ, 2020இல் இங்கிலாந்தின் வேல்ஸ், 2022இல் நேபாளத்தில் ஐலன்பீக், லெபட்ரே, மனசிலு போன்ற மலைகளில் ஏறி பயிற்சி பெற்றுள்ளார்.

# திருகோணமலையிலிருந்து கொழும்பிற்கான குறுக்கு வீதி! உயிர் பறிபோகும் அச்சத்தில் மக்கள்




அநுராதபுரம் - ஹொரவ்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கரடிக்குளத்திற்கு செல்லும் வீதி பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது தமிழர் தலைநகரான திருகோணமலையிலிருந்து கொழும்பிற்கான குறுக்கு வீதியாக காணப்படுவதாகவும், இந்த வீதியை புனரமைப்பு செய்வதன் மூலம் சாதாரண பயணத்தை விட இவ்வீதியூடான பயணமானது பல மணித்தியாலங்களை மீதப்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் குறித்த வீதியானது குன்றும் குழியுமாக இருக்கும் நிலையில் அப்பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகவும் காணப்படுவதால் குறித்த வீதியில் மெதுவாக பயணிக்கும் போது யானைகளால் உயிரே போகும் அபாயமும் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

"தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு வரும் அரசியல்வாதிகளே இப்போது உங்கள் கண்களுக்கு நாம் தெரியவில்லையா?" எனவும் வினவுகின்றனர்.

# சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து காலத்திற்கு காலம் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு



இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது கரிசனையை வெளியிட்டுள்ளது. பல்வேறு தரப்புக்களால் தொடர்ச்சியாக இந்த விடயம் தொடர்பில் விடுக்கப்படும் கோரிக்கைகளை அரசாங்கம் உதாசீனம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வழக்கு தொடராது நீண்ட காலத்திற்கு தடுத்து வைப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து காலத்திற்கு காலம் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் உபயோகிக்கப்படுகிறது. இந்த நிலையில் அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமொன்றை அறிமுகம் செய்ய முனைப்பு காட்டி வருகிறது.

இந்த சட்டத்தில் கூடுதல் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட உள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. அத்துடன் கைது செய்யப்படுவோருக்கு எதிராக சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது விடுவிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

மேலும் ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமை நியமங்களின் அடிப்படையில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.


## அன்பான வாசகர்களுக்கு..!

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள், உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339


# உடையார்கட்டு வெள்ளப்பள்ளம் குளம் அடாத்தாக ஆக்கிரமிப்பு சம்பவ இடத்திற்கு சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி விஜயம்!



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட உடையார்கட்டு பகுதியில் வெள்ளப்பள்ளம் குளம் அடாத்தாக ஆக்கிரமிப்பு செய்வதை நேற்று சனிக்கிழமை (26) பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

வெள்ளப்பள்ளம் குளம் தனியார் ஒருவரினால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லையிடப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு அக்கிராம மக்களினால் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் சம்பவ இடத்திற்கு சென்று இது தொடர்பாக சம்மந்தப்பட்ட திணைக்களங்களை அதிகாரிகளுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உடனடியாக குளத்தை எல்லையிடப்படுவதை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார். கமநல சேவை திணைக்களத்தினால் எல்லையிடப்பட்ட குளத்தை தனியார் ஆக் கிரமிப்பதனால் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ளவதை நேரடியாக அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார் குறித்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் அசமந்த போக்காக உள்ளதாக மக்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

தேசியம்











## தாயின் நீண்டநாள் போராட்டம்: நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட

# யாழ். இளைஞனின் சடலம்

துபாயில் படுகொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - சுண்டுக்குளிப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய கமலதாஸ் நிலக்சன் என்பவரின் சடலம் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த (27.04.2023) ஆம் திகதி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த இளைஞனின் சடலம் நேற்றுமுன்தினம் (25.05.2023) அவரது இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவர் கடந்த 2022ஆம் ஆண்டு வேலைவாய்ப்பிற்காக துபாய்க்கு சென்றுள்ள நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இவரது மரணம் ஒரு திட்டமிட்ட கொலை என சந்தேகிக்கப்பட்ட நிலையில் இது ஒரு தற்கொலை என துபாய் நாட்டு மருத்துவர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்த சடலத்தை பரிசோதித்த பொலிஸாரும் மருத்துவர்களும் இது ஒரு கொலை எனவே சடலத்தை உடனடியாக வழங்க முடியாது எனவும், இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் தாயாரின் மிகுந்த போராட்டத்திற்கு பின்னர் சடலமானது நேற்றுமுன்தினம் சுண்டுக்குழியில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு அவரது இல்லத்தில் நேற்றையதினம் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றுள்ளன.

# கிழக்கில் மிக விரைவில் விமான சேவை ஆரம்பம்!

# அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா உறுதி









கிழக்கு மாகாண விமான சேவை தொடர்பில் ஆளுநர், அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து, விமான சேவைகளை விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (27.05.2023) நடைபெற்றது. இதன்போது கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விமான சேவையை உடனடியாக ஆரம்பிப்பது குறித்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் இரண்டு விமான நிலையங்கள் மற்றும் பல கடல் விமானங்கள் இறங்கும் தளங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளமை குறித்து அமைச்சரின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டு வந்ததையடுத்து விமான சேவைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர், சுற்றுலா பணியகத்தினர், விமானப்படையினர், **Cinnamon Air, Fits Air** மற்றும் ஏனைய தனியார் சேவையாள ர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் **cinnamon Air** தனது விமானச் சேவை யை எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பிப்பதாக உறுதியளித்தது.

அதை ஊக்குவிக்க கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் தனது முழுமையான ஆதரவை அளிப்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் கடவுள் நேரில் தோன்றினாரா?

# உண்மையில் நடந்தது என்ன?







கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் கடவுள் தோன்றினார் என சமூக ஊடகங்களில் ஒரு செய்தி பகிரப்பட்டு வருகிறது.

அண்மைக்காலங்களில் வடக்கு கிழக்கில் கடவுள் சிலை அரசியல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பௌத்த ஆக்கிரமிப்பு வடிவமாக புத்தர் சிலைகள் சிங்கள தரப்பினால் வைக்கப்பட்டு வருகிறது.

பதிலாக, தமிழ் தரப்பில் திட்டமில்லாத உதிரி நடவடிக்கைகளாக, நமது பாரம்பரிய மண்ணில் சைவ சிலைகளை நாமே வைத்துவிட்டு, "திடீரென முளைத்த சிவலிங்கம்", "தானாக தோன்றிய அம்மன் சிலை" என செய்திகளை வெளியிட்டு இன்பம் கண்டு கொண்டிருக்கிறோம்.

இந்த வகையில் கிளிநொச்சி, உமையாள் புரத்தில் வியாழன் அன்று மற்றொரு சம்பவம் நடந்துள்ளது.

அங்குள்ள ஒருவரின் கனவில் கடவுள் தோன்றி, குறிப்பிட்ட இடமொன்றில் நாளை உனக்கு அற்புத காட்சி தெரியும், பெரும் பொக்கிசம் கிடைக்குமென கூறப்பட்டதாக, அவரே கூறினார்.
பின்னர் வியாழன் அன்று மாடு மேய்க்கச் சென்ற போது, நிலத்துக்குள்ளிருந்து ஐயப்பன் சிலை ஒளிவெள்ளத்துடன் மேலெழுவதை கண்டதாகவும், அங்கு சென்ற போது ஐயப்பன் சிலையொன்று காணப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இதையடுத்து, அந்த சிலையை வைத்து அங்கு கோயில் கட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்றவர்கள், அந்த சிலை தொன்மையானதாக தெரியவில்லையென்றனர். சில வருடங்களின் முந்தைய சிலையென்பது முதல் பார்வையிலேயே தெரிவதாக குறிப்பிட்டனர்..

கோயிலை வருமானமீட்டும் தொழிலாக மேற்கொள்ளும் பலர், இவ்விதமான தகவல்களை பரப்பி, கோயில் கட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் பகுதியில் அடாவடியில்...

வாழ்வாதாரத்திற்காக தமது வீடுகளை அண்மித்த பகுதிகளில் வாழைமரங்களை நட்டு, அதனூடாக வருமானத்தை பெற்று வந்துள்ளதாகவும் பாதிப்புக்குள்ளான மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் வாழை குலைகளை விற்பனை செய்ய முயற்சித்த தருணத்தில், அது தமக்கு சொந்தமானது என தோட்ட நிர்வாகத்தினர் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், சிலர் குறித்த பகுதிக்கு வருகைத் தந்து, அங்கு வளர்ந்திருந்த அனைத்து மரங்களையும் வெட்டி வீசியுள்ளனர்.

வாழைமரங்கள் மாத்திரமன்றி, ஏனைய செய்கைகளையும் வெட்டியுள்ளதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர். எந்தவொரு செய்கையையும் இந்த பகுதியில் செய்யக்கூடாது என தமக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும், தமக்கான நியாயத்தை பெற்றுத்தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மொறவக்க காவல் நிலையத்தில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், காவல்துறையினர் இன்று வரை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கை தமிழரசுக் கட்சியின்...

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி தண்டனை வாங்கி தருவார்கள். ஆனால் தற்போது நூறு ஏக்கருக்கு மேல் காடுகள் அழிக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு வனவள அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமை எமக்கு சந் தேகத்தினை ஏற்படுத்தவதாக அக்கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர்.

ஷ

அத்துடன் குறித்த பகுதி ஒதுக்குக்காடு என்பதனால் இதனைத் துப்புரவு செய்வதற்கு ஜனாதிபதி, அமைச்சரவை, காணி ஆணையாளர், காணி அமைச்சர் ஆகியோரின் அனுமதி கட்டாயம் தேவையான ஒன்றாகும்.

இவை எவையும் இன்றி நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் காணப்பட்ட மரங்கள் அழிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் அவர்களிடம் மக்கள் தெரியப்படுத் தியதையடுத்து, ஜனாதிபதியின் கவனத்திற்கு இதனை கொண்டு சென்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

## வட கிழக்கு மக்களது போராட்...

வடகிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளோடும் சுயநிர்ணய உரிமை , பொருத்தமாக வாழ்வதற்கான சூழ்நிலை போன்றவை உருவாகவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு தொடர்ந்தும் நான் பயணித்துக்கொண்டிருப்பவன்.

இதற்காகப் போராடிய, உயிர்த் தியாகம் செய்த தமிழ் அரசியல் கைதிகளோடு தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கின்றேன். அந்த உணர்வோடும் உரிமையோடும் மலையகம் சம்பந்தமாக உரையாற்றவுள்ளேன்.

வடகிழக்கு மக்கள் ஒருபோதும் போராட்டத்தை நிறுத்தவில்லை. வீதிகளில் நின்று போராடுகின்றனர். போராட்டம் உணர்வு பூர்வமானது.

வடகிழக்கு மக்களின் தற்போதைய அன் நாடப் பேச்சாக இனவழிப்பு, இனப்படுகொலை, சர்வதேச நீதி, குற்றவியல் நீதிமன்றம் போன்றன தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இது வடகிழக்குக்கு மட்டும் பொதுவான சொல்லல்ல. மலையகத்திற்கும் பொதுவான சொல். மலையக மக்களும் மிக நீண்ட காலமாக அமைதியான முறையிலே இன அழிப்பிற்கு உட்பட்டுள்ளதுடன் தற்போதும் சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

அது போல மலையக மக்கள் இனப்படுகொலையையும் சந்தித்துக்கொண்டிருக்கின்றார்கள். 1964 ம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் கூட இனப்படுகொலை தான். ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களை கண் முன்னே இழுத்துக்கொண்டு சென்று தகப்பன் இந்தியாவில் தாய் இலங்கையில் என பிளவுபடுத்தப்பட்ட வேதனை இன்னும் தொடர்ந்துகொண்டிருப்பதை காண்கின்றோம்.

அதே போல் 1931 ம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை கிடைத்த பின்னர் இவர்களின் வாக்குரிமையைக் கண்டு பயந்துவிட்டனர். 1937 ம் ஆண்டு புதிய சட்டமொன்றை கொண்டு வந்து அரசியல் ரீதியாக இனவழிப்பை மேற்கொண்டனர்.

அதன் பின் தொழிளாளர்களின் போராட்டம் , எழுச்சியைக் கண்டு பயந்து அவர்களின் வாக்குரிமையைப் பறித்து விட்டனர். இதுவும் ஒரு இன அழிப்பு தான். அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அபிவிருத்தி ரீதியாகவும் மக்கள் ஒடுக்குதலுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

தற்போது பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் கல்விகற்றுக்கொண்டிருப்பதானது வளர்ச்சியாகக் காணப்பட்டாலும் அப் பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதில்லை. குறித்த பிரதேசங்களை அபிவிருத்தியடைய விடாது பேரினவாதம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

200 ஆண்டு காலமாக தொடர்ந்தும் ஒரே பிரதேசத்தில் உயிர் வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது. அவர்கள் வசிக்கும் நிலம் அவர்களுக்கு சொந்தமில்லாமல் காணப்பட்டாலும் 1940 ம் ஆண்டிலிருந்து புதிய புதிய குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. தொடர்ந்தும் ஒரே இடத்தில் வாழும் மக்களுக்கு நிலம் சொந்தமில்லை என்றால் அதுவும் ஒருவகையில் இனவழிப்புத் தான்.

1841 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட போது 70000 பேர் இறந்திருக்கின்றார்கள்.அவர்களுடைய கணக்கில் இறந்திருந்தாலும் எம்முடைய பார்வையில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

பிரயாண வசதிகள், போதுமான உணவு வசதி. உட்பட சுகாதார வசதிகள் வழங்கப்படவில்லை என்றால் இதை கொலை என்று தான் கூற முடியும். இந்தக் கொலையை பிரிட்டிஸ் அரசாங்கமே செய்தபடியால் அவர்களிடம் நீதி கேட்பதுடன் நட்ட ஈட்டையும் கோர வேண்டும்.

தொழிலாளர்களை மட்டும் வைத்துக் கொண்டு ஏனையவர்களை அப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றும் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

மக்களுக்கு வழங்கப்படும் 7 பேர்ஜ் காணி எவ்வாறு போதுமானது. 31000 ஏக்கர் காணி வழங்கப்படவுள்தாக மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். இப்போது அத கொடுக்க மறுக்கின்றார்கள் என்றால் மலையக மக்கள் இப் பூமியில் வாழக்கூடாது என்பதற்காக பேரினவாதம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நாங்கள் முள்ளிவாய்க்காலில் பிணங்களையும் எலும்புக்கூடுகளையும் கடந்து வந்த வரலாறுண்டு.

1890ம் ஆண்டளவில் கோப்பித்தோட்டம் முற்றாக அழிவடைந்த வேளையில் இவர்களுக்கு சம்பளம் கொடுக்க கையிலே பணமில்லை. இதனால் பட்டினியில் விழுந்து சாகின்றார்கள். இறந்தவர்கள் ஆங்காங்கே வீசி எறியப்பட்டார்கள். இவ்வாறான சம்பவங்களையெல்லாம் இனவழிப்பு என கூற முடியும்.

எனவே முதலாளித்துவம் தன்னுடைய பொருளாதாரத்திற்காக இனவழிப்பு மேற்கொண்டிருக்கின்றது. தம்முடைய அரசியலைக் காப்பாற்றுவதற்காகவும் பேரினவாத அரசியலைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இன்றுவரை இனவழிப்பை மேற்கொள்கின்றனர்.

1960களில் மலையகத் தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டுமென தமிழரசுக்கட்சி முன்மொழிவுகளை முன்வைத்தது. இன்றும் மலையக அரசியல்வாதிகள் மக்களுக்கான அரசியலைச் செய்யாமல் அயல் நாடுகளுக்காகவும் மேற்கு நாடுகளுக்குமாக அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே இனவழிப்பு , இனப்படுகொலை என்ற சொற்களுக்கு மத்தியிலே வடக்கும் மலையகமும் ஒன்றுசேர்ந்து ஒன்றாகப் பயணிக்க வேண்டிய தேவையுள்ளதாகக் குறிப்பிட்டார்.

## கொழும்பில் நல்லிணக்க தூபி...

பலர் உயிரிழந்துள்ளனர். அவர்களை ஒன்றாக நினைவு கூருவதற்கு ஒரு நினைவு தூபி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சரவையில் முன் வைத்தேன். எனது கோரிக்கையை ஜனாதிபதி சாதகமாக பரிசீலித்த நிலையில் கொழும்பில் நினைவு தூவியை அமைப்பதற்கான இடத்தினை அடையாளப்படுத்துவதற்காக குழு ஒன்றை அமைப்பதாக தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சாதகமான பதிலை இட்டு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் ஏனெனில் இன மத மொழி வேறுபாடுகளை கலைந்து அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளார். நான் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தை ஆதரித்ததற்கு ஒரே ஒரு காரணம் நாட்டில் உள்ள பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக அதை அவர் நிறைவேற்றினார்.

தற்போதய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்ற போது அவருக்கு நான் வெளிப்படையாகவே எனது ஆதரவை தெரிவித்தேன். ஏனெனில் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சனைகளில் இருந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய ஆளுமை அவரிடமே காணப்படுவதை உணர்ந்து எனது வெளிப்படையான ஆதரவை தெரிவித்தேன்.

அவர் ஜனாதிபதியாக உள்ள நிலையில் மக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கு எந்த தடையும் மேற்கொள்ளப்படவில்லை. போராட்டத்தின் போது இந்த நாட்டில் பல்வேறு இளைஞர் யுவதிகள் கட்சி சார்ந்து அரசியல் குழுக்கள் சார்ந்து செயற்பட்டு உயிரிழந்துள்ள நிலையில் அவர்களையே நினைவு கூறுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கு ஜனாதிபதி நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய நிலையில் எதிர்காலத்தில் அனைத்து இன மக்கள் சார்ந்து நினைவேந்தல்களை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்புகிறேன்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சனை தீர்ப்பதற்கு தமிழ் கட்சிகள் இதய சுத்தியுடன் அவரின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் சட்டத்தை மிதித்து...

பாதுகாப்பு தரப்பினர் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் அதனை மிதித்துத் துவைக்கும் நடவடிக்கையில் ஈடுபட துணிந்திருக்கின்றார்கள்.

இந்த விவகாரத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ்க் கட்சிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

கொழும்பில் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை அடக்குவதற்கு பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கும் வழி வகைகள் விரைவில் இங்கும் வரும்.

பொதுவாகவே சமீப காலத்தில் யாழ்ப்பாணம் உட்பட தமிழ் பிரதேசங்கள் அமைதியான சூழலோடு தான் இருந்து வந்திருக்கின்றன.

பலாலியில் அரங்கேறிய இக்காடைத்தனம் இந்த அமைதிச் சூழலை அடித்து நொறுக்கிவிடும்.

சம்பந்தப்பட்ட பொலீஸ் உயர் அதிகாரிகள் இந்த விவகாரத்தில் பாராபட்சமற்ற விசாரணையை நடாத்த முன்வர வேண்டும்.

அத்துடன் சட்டத்தை மீறி செயற்பட்ட பொலீஸ் அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்ப முன்வர வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தனது ஊடக அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




**தேசியம் பத்திரிகையில் கதைகள் பேசும் பக்கத்திற்கு சிறந்த புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகிறது... நீங்கள் எடுத்த சிறந்த படங்களை எங்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம் பெயருடன் அனுப்பி வையுங்கள்..**

**+94 76 567 3339**

# திடீரென வெளியே விழுந்த சாரதி தறிகெட்டு ஓடிய பேருந்து : அதிரடியாக செயல்பட்டு பலரின் உயிரைகாத்த இளைஞர்



கண்டியில் இருந்து மஹியங்கனை நோக்கி பயணித்து கொண்டிருந்த பேருந்தில் ஏற்படவிருந்த பாரிய விபத்தை பஸ்ஸில் பயணித்த இளைஞன் நந்தன யசரத்ன தடுத்து நிறுத்தி பயணிகளினுயிரை காப்பாற்றியுள்ளார்.

ஓடிக்கொண்டிருந்த உடுதும்புற பாரிய வளைவில் பேருந்தை செலுத்தும் பொழுது சாரதி கதவு திறக்க வெளியே விழுந்துள்ளார்.

இந்நிலையில் சாரதி இல்லாமையால் பேருந்து பள்ளத்தில் வீழச் சென்றது. அப்போது பஸ்ஸில் பயனம் செய்த குறித்த இளைஞன் உடனடியாக சாரதியின் கதிரையில் குதித்து பிரேக் ஐ அழுத்தி பேருந்தை நிறுத்தியுள்ளார்.

இதன் காரணமாக ஏற்படவிருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்ட நிலையில், அதிகளவான பயணிகளின் உயிர்களும் காப்பாற்றப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டையடுத்து நந்தன யசரத்ன எனும் அந்த இளைஞருக்கு பயணிகள் அனைவரும் தமது உயிரை காத்தமைக்காக பாராட்டியுள்ளனர்.

# சாதனை படைத்த மலையக தமிழ்ச் சிறுவன்



கலாநேசன் ஹர்சித் என்ற 5 வயது சிறுவன் உலக வரைபடத்தில் உள்ள 195 நாடுகளின் அமைவிடங்களை அடையாளம் காட்டியவாறு அவற்றின் பெயர்களையும் அவற்றின் தலை நகரங்களையும் 4 நிமிடங்கள் மற்றும் 16 நொடிகளுக்குள் கூறி சாதனை படைத்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தின் பீற்று தோட்டலவர் ஸ்லிப் பிரிவில் விநாயக புரம் பகுதியில் வசித்து வரும் கலாநேசன் மற்றும் லலிதாம்பிகை தம்பதியினரின் மகன் 5 வயதான ஹர்சித் என்ற குழந்தை உலக வரைபடத்தில் உள்ள 195 நாடுகளின் அமைவிடங்களை அடையாளம் காட்டியவாறு அவற்றின் பெயர்களையும் அவற்றின் தலை நகரங்களையும் 4 நிமிடங்கள் மற்றும் 16 நொடிகளுக்குள் ஆங்கில மொழியில் கூறி புதிய சோழன் உலக சாதனை படைத்தார்.

இவர் நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்று வருகிறார். இவருடைய ஞாபகத் திறனை ஊடகங்களூடாக கேள்விப்பட்ட தமிழ்நாட்டில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு உலகின் 26 நாடுகளில் கிளைகளைக் கொண்டு ள்ள பன்னாட்டுச் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தினர் இக் குழந்தையின் முயற்சியை முறைப்படி பரிசோதித்து உலக சாதனையாக அங்கீகாரம் செய்தது.


இதற்கான நிகழ்வு வெள்ளிக்கிழமை (26) நுவரெலியா பரிசுத்த திரித்துவக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர்களான எஸ்.ரவிச்சந்திரன், என்.நவரத்னம், பொறுப்பதிகாரி எஸ்.ஆனந்தஜோதி மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், உலக சாதனை முயற்சிக்கு நடுவர்களாக நேரில் வந்து பார்வையிட்டு உறுதி செய்து உலக சாதனைக்கான சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் சான்றிதழ், நினைவுக் கேடயம், அடையாள அட்டை மற்றும் பதக்கம் போன்றவற்றை வழங்கி கௌரவித்தார்கள்.

அந் நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் முனைவர் யூட் நிமலன் மற்றும் இந்தியாவில் இருந்து வந்திருந்த தலைமைச் செயற்குழுவின் உறுப்பினர் பெருமாள் நீலமேகம் போன்றோர். புதிய சோழன் உலக சாதனை படைத்த இக் குழந்தையை நிறுவனத்தின் நிறுவனர் முனைவர் நீலமேகம் நிமலன் மற்றும் பொது தலைவர் மருத்துவப் பேராசிரியர் தங்கதுரை, 24 நாடுகளின் கிளைகளின் தலைவர்கள், மாநில மற்றும் மாவட்டத் தலைவர்கள் போன்றோர் வாழ்த்திப் பாராட்டினார்கள்.

# இலங்கையின் இராணுவதளபதிக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்கவேண்டும்

## மனுப்போராட்டத்தை ஆரம்பித்தது சர்வதேச அமைப்பு



இலங்கையின் இராணுவதளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக பிரிட்டன் தடைவிதிக்கவேண்டும் என கோரும் மனுவிற்கு ஆதரவாக கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை சர்வதேச அமைப்பொன்று ஆரம்பித்துள்ளது.

இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் வழக்கு தொடருதலுக்கான சர்வதேச நிலையம் என்ற அமைப்பு கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை இணையத்தளத்தில் ஆரம்பித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் ஆதரவாளர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் இலங்கையின் மிகமோசமான யுத்த குற்றவாளியான சவேந்திரசில்வாவிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்கவேண்டும் என கோரும் இந்த மனுவை சமர்ப்பிக்கின்றோம் என இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் வழக்கு தொடருதலுக்கான சர்வதேச நிலையம் தெரிவித்துள்ளது. சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற நம்பகதன்மை மிக்க மனித உரிமை அமைப்பு ஜெனரல் சவேந்திர சில்வா குறித்த 50 பக்க ஆவணமொன்றை தயாரித்து 2020 ஜூலை மாதம் பிரிட்டிஸ்அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாக அறிகின்றோம் என சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் குறித்த பிரிவிடம் இந்த ஆவணங்களை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் சமர்ப்பித்துள்ளது இந்த ஆவணம் 2020 ஜூலை ஆறாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தடை நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் ஏன் சவேந்திரசில்வாவை தடை செய்யலாம் என தெரிவிக்கின்றது எனவும் இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் வழக்கு தொடருதலுக்கான சர்வதேச நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிகாலங்களில் சவேந்திரசில்வா 58 படைப்பிரிவின் தளபதியாக பணியாற்றியவேளை உயிர்வாழ்வதற்கான உரிமை உட்பட மீறப்பட்டமை உட்பட இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களில் சவேந்திர சில்வாவிற்கு உள்ள தொடர்பு குறித்து சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் ஆவணம் தெளிவாக தெரிவித்துள்ளது எனவும் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.


## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது



கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழுள்ள மூலிகைத் தோட்டங்களில் மூலிகைத் தாவரங்களை நாட்டி, சரியான முறையில் பராமரித்து அதன் பயன்பாட்டுப் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, திருகோணமலை கப்பல்துறையில் 4 ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும், மட்டக்களப்பு வாகரையில் 1 ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும் மூலிகைப் பயிர்களை நாட்டி, அதனை பராமரித்து அதன் மூலம் கிடைக்கின்ற மூலப் பொருட்களை சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. மூலிகைப் பயிர்களை செய்கை பண்ணக்கூடிய வகையில், நீர் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அங்கு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்பிட்ட மூலிகைத் தோட்டத்தில் 3 மாத காலப் பகுதியில் செய்கை பன்னக்கூடிய...**

1. சிற்றரத்தை
2. திப்பிலி
3. இஞ்சி
4. சுக்கு
5. ஆடாதோடை
6. வெண்நொச்சி போன்ற இன்னும் பல மூலிகைத் தாவரங்களை செய்கை பன்னவேண்டும்.

இந்த நடைமுறையை ஊவா மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மிக நீண்ட காலமாக கடைப்பிடித்து வருவதுடன், இதற்குத் தகுதியானவர் களுக்கு வழங்கி வருவதுடன், அவர்களினால் செய்கை பன்னுகின்ற மூலிகையின் பயன்பாட்டு மருத்துவப் பொருட்களை குறித்த திணைக்களம் கொள்வனவு செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**இதுபோன்ற நடைமுறையை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதுடன், இதில் ஆர்வமுள்ளவர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 026 - 222 5993, 026 - 222 5639, 026 - 222 5640 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.**

# ஈழத் தமிழர்கள் யாரையும் தாங்கி வாழத் தேவையில்லை..

## கலைப்பீடம் எமது மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கிறது.. துணைவேந்தர் சிறிசற்குணராஜ புகழாரம்.



யாழ் பல்கலைக்கழகத்தில் பல பீடங்கள் இருந்தாலும் கலைப்பீடம் எமது மக்களின் வாழ்வியலையும் வரலாற்றையும் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் ஒரு பீடமாக காணப்படுவதாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறி சற்குணராஜா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக் கழகத்தில் திறந்து வைக்கப்பட்ட கலாநிதி கா. இந்திரா பாலா தொல்லியல் அருங்காட்சிய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் ஆரம்பிக்கப்பட்டமை தொல்லியல் சார்ந்து ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு ஊன்றுகோலாக அமை யும் என நம்புகிறேன்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பல பீடங்கள் இருக்கின்றன அவை அனைத்தும் இலங்கை முழுவதற்குமான பீடங்களாக உள்ள நிலையில் எமது வரலாறு தொல்லியல் சார்ந்து ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு இந்த தொல்லியல் அருங்காட்சியகம் அடித்தளம் இட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்கள் யாரையும் தாங்கி வாழ வேண்டிய தேவையில்லை அவர்களுக்கென மொழி, கலாச்சாரம் ,வாழ்வியல் பண்பாடு, உணவுப்பழக்க வழக்கம் என்பன தன்னகத்தே உரியது.

நாம் வருவதை எதிர்வு கூறக் கூடிய அரைவாற்றல் உள்ளவர்கள் திட்ட முன் ஆயத்தம் உள்ளவர்கள் ஆய்வுகளை இன்னும் ஆய்வு செய்ய கூடியவர்கள்.

நூலகர் முருகவேலை நாம் மறந்துவிட முடியாது சித்த மருத்துவ துறையின் ஆய்வுகளுக்கு அடித்தளமிட்ட அகத்தியரின் 25 ஆயிரம் ஏட்டுச் சுவடுகள் அவரால் பாதுகாக்கப்பட்டது.

சித்த மருத்துவத்துறையை பீடமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அதனோடு சம்பந்தப்பட்ட ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் முன் வந்ததா சிங்களம் முன் வந்ததா என்ற பிரச்சனை எமக்குத் தேவையில்லை தமிழ் மொழி தனித்து இயங்கக்கூடிய மொழி உதாரணமாக கூற வேண்டுமானால் நாயன்மார்கள் பாடிய பாடல்களில் ஒரு வட மொழிக் கலப்பு கூட இடம்பெறவில்லை.

ஆகவே கலாநிதி இந்திரா பாலாவின் தொல்லியல் அருங்காட்சியகம் எமது மக்களின் வாழ்வியலையும் வரலாற்று ஆய்வுகளையும் முன்னெடுத்துச் செல்கின்ற கலைத்துறை சார்ந்த மாணவர்களுக்கு ஊன்றுகோலாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இன் நிகழ்வில் வரலாற்று துறை தலைவர் திருமதி சாந்தினி அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிறீ சற்குணராஜா, ஓய்வுநிலை வரலாற்று துறை சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், பேராசிரியர் சி.ரகுராம், சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சயிதரன், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கோட்டபாய கடற்படை தளத்தில் இடம்பெற்ற பேச்சு நம்பிக்கையை தருகின்றது

# கடத்தொழிலாளர் சம்மேளனம்




முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை தளத்தில் கிழக்கு பிராந்திய கடப்படை தளபதி உடன் கடந்த 25 ஆம் திகதி பேச்சுவார்த்தை இடம்பெற்றதாக மாவட்ட கடத்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

குறித்த சந்திப்பின் போது சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து பேசப்பட்டதாக சம்மேளனம் அறிவித்துள்ளது.

நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே முல்லைத்தீவு மாவட்ட கடத்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் வி.அருள்நாதன் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் குறிதத பேச்சுவார்த்தையின்போது தமக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய பல விடையங்கள் வெளியிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ் சிறைச்சாலை கூரையில் ஏறி

## கைதியொருவர் உண்ணாவிரத போராட்டம்!




நேற்று 27.05.2023 15.30 மணி முதல் யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் B2 அறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்வரும் கைதி சிறைச்சாலையின் கூரையில் ஏறி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

கஸ் கார்டன் வீதி, வில்பிட்ட அக்குரஸ்ஸ மாத்தறை என்ற இடத்தை சேர்ந்த புஷ்பகுமார. போல் 41 வயது உடையவரே இவ்வாறு கூரையில் ஏறி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

சிறைச்சாலைகள் ஆணையாளரின் உத்தரவுக்கமைய 12.02.2023 அன்று குருவிட்ட சிறைச்சாலையிலிருந்து யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட இவர் பல திருட்டு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்.

யாழ்.சிறைச்சாலையில் இருந்து வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி அவர் மேற்கண்டவாறு உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.





அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேனி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |

| | | |
|---|---|---|
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |







இப்பத்திரிகை 26.05.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.